# நீர்போக உருளைக்கிழங்கிற்கு அறுவடையின் போது நல்ல விலை கிடைக்கும்

இந்தியாவில், உருளைக்கிழங்கு நான்காவது முக்கிய உணவு பயிராகும். இந்தியாவில் 2014-15ல் உருளைக்கிழங்கு 20.69 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு, 480 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. உத்திரபிரதேசம், மேற்கு வங்காளம், பீகார், குஜராத், பஞ்சாப், மத்திய பிரதேசம் மற்றும் அசாம் ஆகிய மாநிலங்கள் மொத்த உருளைக்கிழங்கு உற்பத்தியில் 85 சதவீதம் பரப்பளவிலும், 90 சதவீதம் உற்பத்தியிலும் பங்களிக்கின்றன.

தேசிய தோட்டக்கலை வாரியத்தின் படி, 2014-15ல் தமிழ்நாட்டில் உருளைக்கிழங்கு 6100 எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 1.3 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் மலைப்பாங்கான பகுதிகளான திண்டுக்கல், நீலகிரி, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் உருளைக்கிழங்கு பெருமளவு பயிரிடப்படுகிறது. மற்ற மாநிலங்களில் பயிரிடப்படும் உருளைக்கிழங்கை விட நீலகிரியில் பயிரிடப்படும் உருளைக்கிழங்கிற்கு அதிக விலை கிடைக்க காரணம் கிழங்கின் அளவு, அதிக மாவு சத்து, அதிக சுவை மற்றும் குளிர்பதன இல்லாமல் நீண்ட காலம் சேமிக்கும் தன்மை ஆகியவை ஆகும்.

நீர்போகம் / நீர்பாசன சாகுபடி உருளைக்கிழங்கு பிப்ரவரி – மார்ச் மாதங்களில் பயிரிடப்பட்டு, மே -ஜுன் மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. உருளைக்கிழங்குகள் ஐந்து முதல் ஆறு மாதங்கள் வரை குளிர்பதன சேமிப்பு முறையில் சேமிக்கப்படுகிறது. பெரும்பாலும், கர்நாடகா மற்றும் மத்தியப்பிரதேசம் போன்ற பிற மாநிலங்களிலிருந்து வரும் உருளைக்கிழங்குகள் விதை உபயோகத்திற்க்காக ஜனவரி முதல் மே மாதம் வரை சேமிக்கப்படுகின்றன. தற்போதைய, நல்ல தரமான உருளைக்கிழங்கிற்கு பண்ணை விலையாக கிலோவிற்கு ரூ.15 முதல் ரூ.18 வரை மேட்டுப்பாளையம் சந்தையில் விற்கப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் கீழ் இயங்கி வரும் வேளாண் விற்பனை தகவல் மற்றும்

வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், மேட்டுப்பாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் (NCMS) கடந்த 19 வருடங்களான நிலவிய உருளைக்கிழங்கின் விலை குறித்து ஆய்வு மேற்கொண்டது. ஆய்வு முடிவுகளின்படி, விவசாயிகளுக்கு நல்ல தரமான உருளைக்கிழங்கிற்கு மே - ஜுன் மாதங்களில், கிலோவிற்கு ரூ.24 முதல் ரூ.26 வரை விலை கிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்படும் விலையினை அடிப்படையாக கொண்டு விவசாயிகள் தங்கள் நீர்போக உருளைக்கிழங்கு சாகுபடியை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும் :</u>**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர்-641003

தொலைபேசி: 0422-2431405


**<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும் :</u>**


பேராசிரியர் மற்றும் தலைவர்

தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம்

விஜயநகரம்

உதகமண்டலம்-643001.

தொலைபேசி: 0423-2442170